BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# உள்ளூர் கலைஞர்கள் மற்றும் லாபநோக்கு-அல்லாத அமைப்புக்களுக்கு ஆதரவளிப்பதற்கான மானிய கோரிக்கை விண்ணப்பங்களை ப்ராம்ப்ட்டன் நகரம் பெறத்துவங்கியுள்ளது

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 4, 2021) – இன்றிலிருந்து, இரண்டு விதமான சமுதாய மானியம் பெறும் வாய்ப்புக்களுக்கான விண்ணப்பங்களை, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஏற்றுக்கொள்கிறது; இதில் ஒன்று ப்ராம்ப்ட்டன் நகரைத் தளமாகக் கொண்டு முக்கியமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற லாப நோக்கல்லாத அமைப்புக்களுக்கானது, மற்றும் இன்னொன்று, கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து உள்ளூர் கலைஞர்கள் மீட்சி பெறுவதற்கானது.

**அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதி**

$600,000 நிதி கொண்ட சமுதாய மானியம் வழங்கும் திட்டம் என்பது, ப்ராம்ப்ட்டன் நகரைத் தளமாகக் கொண்ட, தகுதிவாய்ந்த, லாப-நோக்கல்லாத அல்லது அறக்கட்டளை அமைப்புக்கள், சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுகின்ற திட்டங்கள் மற்றும் சேவைகளைச் சேர்ப்பிக்க என உருவானதாகும்..

இதில் மூன்றுவிதமான நிதி வழங்கல்கள் உள்ளன:

- **முளைத்தெழுபவை –** புதிய மற்றும் புதுமை படைக்கும் வகையிலான திட்டப்பணிகளுக்கு பொருந்தும் வகையில் $5,000 நிதி வழங்கப்படுகிறது. விண்ணப்பங்கள் அக்டோபர் 4 முதல் நவம்பர் 29 வரை பெறப்படும்.
- **வளர்ச்சி பெறுபவை -** ஒருமுறையேனும் ப்ராம்ப்ட்டன் நகரில் திட்டங்களை நிகழ்த்தியவர்களுக்கு $12,500 வரையிலான நிதி வழங்கப்படுகிறது. விண்ணப்பங்கள் அக்டோபர் 4 முதல் நவம்பர் 29 வரை பெறப்படும்.
- **பெருவளர்ச்சி காண்பவை –** குறைந்தது இரண்டு தடவைகளில் ப்ராம்ப்ட்டன் நகரில் திட்டங்களை நிகழ்த்தியவர்களுக்கு $25,000 வரையிலான நிதி வழங்கப்படுகிறது. விண்ணப்பங்கள் அக்டோபர் 4 முதல் நவம்பர் 29 வரை பெறப்படும்.

அனைத்து நிதி வழங்கல்களுக்கான விண்ணப்பங்களும் 2022 இல் நடைபெறவிருக்கும் திட்டங்கள் தொடர்பானவையாகும். ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கு என தனிப்பட்ட

சேவைகளை வழங்குபவர்களுக்கே மானியங்கள் வழங்கப்படும்; இவற்றில் ஒருங்கிணைந்த இலாப நோக்கற்ற நிறுவனங்கள், பதிவுசெய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் அடங்கும்; மற்றும், வளர்ந்து வரும் அமைப்புக்கள் வகையில், பெருநிறுவனமாக பதிவுகொண்ட லாப நோக்கற்ற குழுக்கள் உட்பட, ஒவ்வொரு நிதி வழங்கல் வகையிலும், விண்ணப்பதாரர்கள் தங்கள் திட்டத்துடன் சிறந்த முறையில் இணக்கமாக அமைகின்ற கவுன்சில் கால முன்னுரிமை விஷயங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

விண்ணப்பங்களைப் பரிசீலிக்கின்ற செயல்முறை பற்றிய மெய்நிகர் தகவலளிக்கும் அமர்வுகளில் கலந்துகொள்ள விருப்பமுள்ள நிறுவன அமைப்புக்கள் அழைக்கப்படுகின்றனர்.

- அக்டோபர் 7 – முளைத்தெழுபவை தொடர்பான நிதி வழங்கல் பற்றிய தகவலளிக்கும் அமர்வு
- அக்டோபர் 14 – வளர்ச்சிபெறுபவை தொடர்பான நிதி வழங்கல் பற்றிய தகவலளிக்கும் அமர்வு
- அக்டோபர் 21 – பெருவளர்ச்சி காண்பவை தொடர்பான நிதி வழங்கல் பற்றிய தகவலளிக்கும் அமர்வு

உள்ளூர் இலாப நோக்கற்ற மற்றும் தொண்டு நிறுவனங்களை மேலும் ஆதரிக்க, அட்வான்ஸ் பிராம்ப்டன் ஃபண்ட் அமைப்பானது ரையர்ஸன் பல்கலைக்கழகத்தின் ஜி. ரேமண்ட் ச்சாங் ஸ்கூல் ஆஃப் கன்டின்யூவிங் எஜுகேஷன் (Ryerson University's G. Raymond Chang School of Continuing Education) உடன் கூட்டு சேர்ந்துள்ளது. பயிற்சிப் பட்டறைகள் நவம்பரில் நடத்தப்படும். brampton.ca/abf இல் விவரங்கள் உள்ளன

**கலைஞர்களுக்கான புதிய கோவிட்-19 மீட்சி நிதி**

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமும் மற்றும் கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பு ரீதியான தொழில் மேம்பாட்டு நிறுவனமும் (ACCIDA) சேர்ந்து, இந்த ஆண்டில் புதியதான, கலைஞர்களுக்கான கோவிட் -19 மீட்பு நிதியை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றன; இது, ஒன்ட்டேரியோ மாகாணம் மீண்டும் திறக்க மற்றும் தொற்றுநோயிலிருந்து மீட்சி பெறத் தொடங்கும் போது ப்ராம்ப்ட்டனின் படைப்புத் துறையை ஆதரிக்க உதவும் ஒரு தனித்துவமான திட்டம் ஆகும். இந்த திட்டம், கலைஞர்கள் மற்றும் கலை அமைப்புகளுக்கான 2020 ஆம் ஆண்டின் கோவிட் -19 நிவாரண நிதியின் நீட்டிப்பாகும்.

தொற்றுநோய்த் தாக்கத்திலிருந்து விடுபட்டு தங்கள் படைக்கும் தொழிலை நிலைநிறுத்த,

மாற்றியமைக்க அல்லது மீண்டும் உருவாக்க, தனிப்பட்ட கலைஞர்கள் $ 2,000 வரையிலான நிதிக்காக விண்ணப்பிக்கலாம். தனிப்பட்ட கலைஞர்களுக்கான விண்ணப்பங்கள் அக்டோபர் 4 முதல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை அல்லது கிடைக்கவிருக்கும் நிதி தீர்ந்து போகும் வரை ஏற்கப்படும். கிடைக்கவிருக்கும் நிதியின் மொத்த தொகை $ 100,000 ஆகும்.

விண்ணப்பக் கோரிக்கைகளை மீள்பார்வையிடுவதற்காக, கலைஞர்கள் மற்றும் சாத்தியமான விண்ணப்பதாரர்களுக்கு தகவல் அமர்வுகளும் நடத்தப்படும். விவரங்கள் இங்கே உள்ளன.

- வெள்ளிக்கிழமை, அக்டோபர் 22, மாலை 6:30 - 8 மணி
- திங்கட்கிழமை, நவம்பர் 22, 6:30 - 8 மணி

**ப்ராம்ப்ட்டனில் வளர்ந்து வருகின்ற படைப்பாற்றல் தொழிற்பாதைகள்**

உள்ளூர் கலைஞர்களை மேலும் ஆதரிப்பதற்காக, WorkInCulture அமைப்புடன் ACCIDA இணைந்து, கலைஞர்கள் மற்றும் கலைத் தொழிலாளர்களுக்கான இலவச 10-அமர்வுகள் கொண்ட *ப்ராம்ப்ட்டனில் வளர்ந்து வருகின்ற படைப்பாற்றல் தொழிற்பாதைகள்* எனும் தொழில் வளர்ச்சி பயிற்சிப்பட்டறைத் தொடரை வழங்குகிறது. ஒவ்வொரு வாரமும், பரஸ்பர செயல்பாடுகள், நெட்வொர்க்கிங் வாய்ப்புகள், நிபுணர் ஆலோசனைகளைப் பெறுதல் மற்றும் டிராப்-இன் அமர்வுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பை பங்கேற்பாளர்கள் பெறுவார்கள். விவரங்கள் Accida.ca வில் உள்ளன.

**விண்ணப்பிக்க விருப்பமா?**

அட்வான்ஸ் பிராம்ப்டன் நிதி மற்றும் கோவிட் -19 கலைஞர்களுக்கான மீட்பு நிதி ஆகியவற்றுக்கான தகவல் அமர்வுகளுக்கு பதிவு செய்ய மற்றும் விவரங்கள், தகுதி மற்றும் விண்ணப்பத் தகவல்களைப் பெற, brampton.ca/communitygrantsஐப் பார்வையிடவும்

**அறிஞர் கூற்றுக்கள்**

" நமது கலைஞர்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் சமூகத்திற்கு சிறந்த சேவை செய்ய, முன்னெப்போதைக் காட்டிலும், நமது ஆதரவு இப்போது தேவை மற்றும் COVID-19

தொற்றுநோயிலிருந்து மீள்வதற்கும் உதவ வேண்டும். ப்ராம்ப்ட்டன் வாய்ப்புகளுக்கன நகரம், அட்வான்ஸ் பிராம்ப்டன் நிதியின் தொடர்ச்சியான வெற்றியையும், அது எங்கள் இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கு வழங்கும் நன்மையையும் கண்டு, நான் மகிழ்ச்சியடைகிறேன். தனிப்பட்ட கலைஞர்களுக்கு இந்த புதிய வாய்ப்பை அறிமுகப்படுத்துவதில் நானும் பெருமைப்படுகிறேன். ப்ராம்ப்ட்டனின் படைக்கும் சமூகம் தொற்றுநோயால் கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளது, மேலும் இந்த வாய்ப்பு அவர்கள் முன்னேறவும் மீட்சி பெறத் துவங்கவும் உதவும் என்று நம்புகிறேன்.

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதிக்கு மற்றொரு சுற்று விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன் மற்றும் அனைத்து ப்ராம்ப்ட்டன் நகர இலாப நோக்கற்ற நிறுவனங்களையும் இதற்காக விண்ணப்பிக்க ஊக்குவிக்கிறேன். குறிப்பாக தொற்றுநோயிலிருந்து நாம் மீண்டு வருகையில், நமது இலாப நோக்கற்ற துறையானது, சமூகத்திற்காக செய்யும் பணி விலைமதிப்பில்லாதது. இந்த நிதி வாய்ப்பு, ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரமாக இருக்க உதவுகிறது.

*- ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10; தலைவர், கார்ப்பரேட் சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"எங்கள் கலைஞர்கள் தொற்றுநோயிலிருந்து மீட்சி பெற்று முன்னேறத் தேவையான உதவியைப் பெற, இந்த நிதி வாய்ப்பை அறிமுகப்படுத்திய, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மற்றும் கலை, கலாச்சாரம் மற்றும் ஆக்கபூர்வமான தொழில் மேம்பாட்டு முகமை ஆகியவற்றைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன். ப்ராம்ப்ட்டனின் கலைஞர்கள் கோவிட்-19 தொற்றினால் கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்; மேலும் பல கலவை கொண்ட ப்ராம்ப்ட்டன் நகருக்கான முக்கிய பங்களிப்பாளர்களாக இருக்கும் அவர்களுக்கு அளிக்கப்படும் இந்த ஆதரவைக் காண்பது பெருமயளிக்கிறது. "

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத் தலைவர், பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்; கவுன்சில் குழு உறுப்பினர், கலை, கலாச்சாரம் & ஆக்கப்பூர்வமான தொழில் மேம்பாட்டு முகமை*

அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதி மற்றும் கலைஞர்களுக்கான கோவிட் -19 மீட்பு நிதி போன்ற வாய்ப்புகள் மூலம் நமது சமூகத்தை ஆதரிக்க ப்ராம்ப்ட்டனின் நகர கலாச்சார சேவைகள் குழு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இந்த நிதி ஆதாரங்களில் ஆர்வமுள்ள அனைவரையும் தகவல் அமர்வுகளில் பங்கேற்கவும் மற்றும் அவர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும் நான் ஊக்குவிக்கிறேன்.

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, *மற்றும்* Instagram *ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.* www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca